**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் - விவசாய நிலங்களில்தனிநபர் கிணறுகள் மற்றும் குழு கிணறுகள் அமைப்பது தொடர்பான அறிவிப்பு**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2016-17 ம் ஆண்டில் விவசாய நிலங்களில் பாசன கிணறுகள் வெட்டுவதற்கு தமிழக அரசால் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**நோக்கம்**

நிலத்தடி நீர் மட்டம் அதிகமாக உள்ள இடங்களில் தனிநபர் விவசாய நிலங்களில் நீர்ப்பாசன வசதிகளை பெருக்கி, விவசாய விளை நிலங்களின் பரப்பினை அதிகரிக்க தனிநபருக்காக கிணறுகள் மற்றும் குழு கிணறுகள் அமைத்தல்

**தகுதிகள்**

பயனாளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சேர்ந்தவர்களாகவோ, சிறு மற்றும் குறு விவசாயிகளாகவோ இருக்க வேண்டும். ஒரு தனி நபருக்கான பாசன கிணறு வெட்டுவதற்கு ரூ.8.00 லட்சம் வழங்குவதற்கு மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயனாளி மேற்படி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டவராக இருக்க வேண்டும்.

பாசன கிணறு வெட்டுவதற்கான இடம் மத்திய நிலத்தடி நீர் வாரியத்தினால் (Central Ground water Board) பரிந்துரைக்கப்பட வேண்டும். பயனாளிகளில் 30% ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு வழங்கப்படும்.

மத்திய நிலத்தடி நீர் வாரியத்தினால் கிணறு வெட்ட பாதுகாப்பான பகுதியாக அறிவிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே கிணறு வெட்ட அனுமதிக்கப்படும். ஆழம் மற்றும் சுற்றளவு இரு கிணறுகளுக்கான இடைவெளி ஆகியவை நில அடிப்படையில் தேர்வு செய்யும் போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

பயனாளிகளின் விவசாய நிலம் அமைந்துள்ள இடம், கிணறு வெட்ட பரிந்துரை செய்யப்படும் ஆழம், கிடைக்கும் நீரின் அளவு மற்றும் நீரின் தன்மை ஆகியவை குறித்த Geologist பரிந்துரையின் அடிப்படையிலேயே விவசாயிகள் தேர்வு செய்யப்படுவார்கள். பரிந்துரைக்கும் ஆழம் அதிகபட்சம் 20 மீட்டருக்குள் இருக்க வேண்டும்.

முதற்கட்டமாக காரியாபட்டி, திருச்சுழி, நரிக்குடி, அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த விவசாயிகள் இத்திட்டத்தினை பயன்படுத்த விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. மேலும் விவரங்களுக்கு மேற்படி வட்டாரங்களின் வட்டார வளர்ச்சி அலுவலர்களை அனுகவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ரத்தினக்குமார்
வட்டார வளர்ச்சி அலுவலர்
தொலைபேசி எண்: 7402608270